## மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டப்பேரவை விதி 110ன் கீழ் 1-9-2006 அன்று படித்தளித்த அறிக்கை

சத்துணவு மையங்களிலும் அங்கன்வாடிகளிலும் பணியாற்றுவோர் ஊதிய உயர்வு உள்ளிட்ட சில கோரிக்கைகளை நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர்.

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், மீனவர்கள் போன்ற அனைத்துத் தரப்பினருக்கும் இயன்றவரையில் அவர்கள் மனம் குளிர பல்வேறு சலுகைகளை தொடர்ந்து வழங்கி வரும் இந்த அரசு – இப்போது நிதியாதார பற்றாக்குறை இருந்த போதிலும் – சத்துணவு திட்டம் மற்றும் அங்கன்வாடிகளில் பணியாற்றுவோரின் கோரிக்கையை அலட்சியப் படுத்த விரும்பாத நிலையில் – அவர்களுக்கு இயன்ற வரையில் ஆவன செய்திட வேண்டுமென்ற எண்ணத்தோடு, இப்போது அவர்கள் பெற்று வரும் பயன்களோடு மேலும் ஓரளவு பயன் பெற வேண்டும் என்ற வகையில் பின்வரும் அறிவிப்புகளை பரிவுடன் வெளியிடுகின்றது.

சத்துணவுத் திட்ட அமைப்பாளர்களும், அங்கன்வாடி பணியாளர்களும் தற்போது ஒவ்வொரு மாதமும் ஊதியமாக ரூ. 2158 பெறுகின்றனர். இவர்களுக்கு இனி ரூ. 1300–20–1500–25–2000 என்ற ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்படும். இதன் காரணமாக இதுவரை ரூ. 2158 மட்டுமே மொத்த ஊதியமாகப் பெற்று வந்தவர்கள், இனி ரூ. 260 கூடுதலாகப் பெற்று மொத்தம் 2418 ரூபாய் ஊதியமாகப் பெறுவார்கள்.

சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர்களும், அங்கன்வாடிகளில் பணியாற்றும் முதல் நிலை அங்கன்வாடி உதவியாளர்களும் தற்போது ஒட்டு மொத்த ஊதியமாக மாதம் ரூ. 1180

பெறுகின்றனர். இத்துடன் மேலும் ரூ. 120 சேர்த்து, மாதம் ஒன்றுக்கு ரூ. 1300 வழங்கப்படும்.

சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையல் உதவியாளர்களும், அங்கன்வாடிகளில் பணியாற்றும் இரண்டாம் நிலை உதவியாளர்களும் தற்போது ஒட்டு மொத்த ஊதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 890 பெறுகின்றனர். இத்துடன் மேலும் ரூ. 110 சேர்த்து மாதம் ஒன்றுக்கு ரூ. 1000 வழங்கப்படும்.

இந்த அறிவிப்பு காரணமாக 88,070 சத்துணவு அமைப்பாளர்களும், அங்கன்வாடி அமைப்பாளர்களும், 82,324 சத்துணவு மைய சமையலர்களும், அங்கன்வாடி மைய முதல் நிலை உதவியாளர்களும், 41,344 சமையல் உதவியாளர்களும், அங்கன்வாடி மைய இரண்டாம் நிலை உதவியாளர்களும் ஆக மொத்தம் இரண்டு இலட்சத்து 16 ஆயிரத்து 164 பணியாளர்கள் பயனடைவார்கள். ஆண்டு ஒன்றுக்கு இந்த அறிவிப்பின் காரணமாக ஒட்டுமொத்தமாக கூடுதலாக ரூ. 45.41 கோடி ரூபாய் செலவாகும். இந்த ஊதிய உயர்வுகள் 1–9–2006 முதல் நடைமுறைக்கு வரும்.

****

# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டப்பேரவை விதி 110ன் கீழ் 1.9.2006 அன்று படித்தளித்த அறிக்கை

1989ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழ்நாடு ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்திய போது – அதற்கு முன்பு நான்கு ஊதியக் குழுக்களின் பரிந்துரைகளின்படி ஒய்வூதியதாரர்களும், குடும்ப ஒய்வூதியதாரர்களும் பெற்று வந்த ஒய்வூதியம் மற்றும் அகவிலைப்படி ஆகியவற்றை உயர்த்தி அதனால் ஏற்படும் பணப்பயன் 1.6.1988 முதல் நடைமுறைக்கு வருமாறு முன்தேதியிட்டு 9.8.1989 அன்று ஆணையிட்டது. அப்படி ஆணையிட்டபோது, 500 ரூபாய் வரை மாத ஒய்வூதியம் பெற்று வந்தவர்களை ஒரு பிரிவினராகவும்; 500 ரூபாய்க்கு மேல் மாத ஒய்வூதியம் பெற்று வந்தவர்களை மற்றொரு பிரிவினராகவும் கொண்டு; அதனடிப்படையில் 1.6.1960க்கு முன்பு ஒய்வு பெற்றவர்களுக்கு 60 சதவிகிதம் என்று தொடங்கி படிப்படியாக 1.10.1984 முதல் 30.9.1987 வரை ஒய்வு பெற்றவர்களுக்கு 15 சதவிகிதம் வரை அதாவது ரூபாய் 300 முதல் ரூபாய் 100 வரை குறைந்தபட்ச பணப்பயன் கிடைக்குமாறு வகை செய்யப்பட்டது.

ஆனால் இந்த பணப்பயன் உயர்வை எந்த பாகுபாடுமின்றி 500 ரூபாய் வரை மாத ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு 60 சதவிகித உயர்வு என்றும்; 500 ரூபாய்க்கு மேல் மாத ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு 50 சதவிகித உயர்வு என்றும் ஒரே சீராக பணப்பயன் கிடைத்திடும் வகையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று அம்பாசமுத்திரம் தாலுக்கா ஒய்வூதியர் சங்கம் தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் 1991இல் தொடுத்த வழக்கில், அவர்களது கோரிக்கை ஏற்கப்பட்டதன் காரணமாக பணப்பயன் 60 சதவிகிதம் மற்றும் 50 சதவிகிதம் என கிடைத்திடும் வகையில் 15–6–1998இல் ஆணை வெளியிடப்பட்டது.

இந்த ஆணை வழக்கு தொடுத்த சங்கத்திற்கு மட்டுமே பொருந்தும் என்பதால் ஒவ்வொரு ஒய்வூதியதாரர்கள் சங்கமும் தனித்தனியாக உயர் நீதிமன்றத்தை நாடி, அம்பாசமுத்திரம் தாலுக்கா ஒய்வூதியர் சங்கம் பெற்ற பலனை தங்களுக்கும் வழங்க வேண்டுமென்று வழக்கு தொடுத்து, நீதிமன்ற ஆணைகளின் அடிப்படையில் அவ்வப்போது அரசு ஒய்வூதியதாரர்களுக்கான பணப்பயனை திருத்தி ஆணை வெளியிட்டு வருகிறது.

இவ்வாறு ஒய்வூதியதாரர்கள் வயது முதிர்ந்த காலத்தில் நீதிமன்றத்திற்குச் சென்று அதனால் ஏற்படுகின்ற கால விரயம், செலவு போன்ற இன்னல்களைத் தவிர்ப்பதென்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது. அதனையொட்டி, 1.6.1988 அன்றைய நிலையில் உள்ள ஒய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஒய்வூதியதாரர்கள் அனைவருக்கும் முறையே 60 சதவிகிதம் மற்றும் 50 சதவிகிதம் பணப்பயன் உயர்வு அளிப்பதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

82 ஆயிரத்து 423 ஒய்வூதியதாரர்களின் நலன் கருதி இந்த அரசு எடுத்த முடிவின் பயன் இந்த ஆண்டுக்குள் ஒய்வூதியதாரர் களுக்கும் கிடைக்கும். அரசுக்கு கூடுதலாக 350 கோடி ரூபாய்ச் செலவாகும்.

******